DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of Judicial Magistrate Court, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 131/2019** |
| Deposition of Witness for | : PW 1 |
| Name | : முருகன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 18.06.2026 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 18th **June** 2026.

**எதிரிகள் ஆஜரில்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கறிஞர் ஆஜர்**

**<u>முதல்விசாரணை தொடர்ச்சி :</u>**

என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த கையொப்பம் அ.சா.1 ஆகும். புகார் மனுவில் உள்ள விபரம் தெரியும். என்னிடம் காண்பிக்கப்படும் கடந்த 22.06.2011–ம் ஆண்டு எனக்கு முனியான்டி என்ற டேனியல் என்பவர் ஈரோட்டில் உள்ள வங்கியில் நகை ஏலம் எடுப்பது பற்றிய நானும் டேனியலும் உரிய சாட்சிகள் முன்னிலையில் ஏற்படுத்திக் கொண்டு ஒப்பத்தம் ஆகும். அந்த பதிவு

செய்யாத ஒப்பத்தம் அ.சா.2 ஆகும். (மேற்படி பதிவு செய்யாத ஒப்பத்தம் எதிரி தரப்பில் ஆட்சேபனைக்கு உட்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது). வழக்கு சம்மந்தமகா போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 10 வகுப்பு படித்துள்ளேன். நான் எழுத படிக்க படித்ததை புரிந்துகொள்ளும் தன்மை எனக்கு உண்டு. நான் நகை கடை போட்டிருந்தீர்களா என்றால் நான் நகை கடை போடவில்லை. தங்க நகை தொழில் தெரியுமா என்றால் தெரியும். தங்க நகை வியாபாரம் செய்து வந்தேன். எனக்கு தங்க நகையை எடை போடும் Machine வைத்துள்ளீர்களா என்றால் வைத்துள்ளேன். நான் எடைபோடும் தராசில்-ல் வணிக வரித்துறையுடைய முத்திரை உண்டா என்றால் இல்லை. உங்கள் தொழிலில் நகைக்கு என்று தனி Brand உங்களுக்கு உண்டா என்றால் எனக்கு MSS என்ற ஒரு Brand உண்டு. அதை பதிவு செய்துள்ளீர்களா என்றால் இல்லை. இப்போது நான் நீதிமன்றத்தில் சொன்ன அனைத்து விபரங்களையும் புலன் விசாரணை அதிகாரி கேட்டாரா என்றால் கேட்டார். நான் விபரங்களை கூறினேன். நகை தொழில் செய்தவதற்கான ஆசிட்டை உரிமை உள்ளவர்கள் மட்டுமே வாங்கமுடியும் மற்றவர்களால் வாங்க முடியாது என்றால் சரிதான். நான் நகை தொழில் தான் செய்து கொண்டிருக்கிறேன் என்பதற்கான ஆவணம் என்னிடம் உள்ளதா என்றால் உள்ளது. புலன் விசாரணை அதிகாரியிடம் ஆவணங்களை கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். என் தந்தை பெயர் வீரபாண்டியன். எனது தந்தை என்ன தொழில் செய்கிறார் என்றால் தச்சு வேலை தொழில் செய்கிறார் என்றால் சரிதான். எனக்கு தச்சு வேலை

தெரியுமா என்றால் தெரியும். தச்சு வேலை செய்யும் நான் தங்க நகை செய்யும் தொழில் செய்கிறேன் என்ற பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. இந்த ஆவணம் ஆனது திருநெல்வேலி கீழ ரத வீதி முத்திரைத்தாள் விற்பணையாளரிடம் பெறப்பட்டது என்றால் சரிதான். அந்த முத்திரை தாள் ஆவணத்தில் ஜீன் 17, 2011 என தேதி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். முத்திரை தாள் வாங்குபவரையுடைய பெயர், ஊர் குறிப்பிடப்படுமா என்றால் சரிதான். இந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. இந்த ஆவணத்தை யார் எழுதியுள்ளார் என்பது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. ஒப்பந்தம் என்றால் இருவருகளுக்கிடையே தான் ஒப்பந்தம் போடப்படும் என்றால் சரிதான். இதில் இரண்டு தரப்பினர்களின் கையொப்பம் போடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. நான் எவ்வளவு ரூபாய்கு ஒப்பந்தம் போட்டேன் என்றால் ரூ.5,50000 /- தான் ஒப்பந்தம் போட்டேன். நான் புகார் வாக்குமூலத்தில் எவ்வளவுக்கு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது என்று கூறினேன் என்றால் ரூ.6,00000/-க்கு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது என்று கூறியிருக்கிறேன். இந்த ஆவணத்தில் ஒரு கிராம் ரூ.2300 விகிதம் 261 கிரமிற்கு ரூ.6,03000/-ரூபாய் இவர் கொடுத்தாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். எந்த ஒரு ஒப்பந்த்திலும் சரியாக தொகை போடுவதுதான் முறை சரியாக தொகை போடவில்லை என்றால் அது முறையல்ல. எதிரி ஆனந்தராஜ்யிடம் நான் promissery note வாங்கினீர்களா என்றால் 1 மட்டும் வாங்கினேன். அதில் நாள், தொகை எதுவும் குறிப்பிடப்படாமல் கையெழுத்து மட்டும் பெற்று வைத்துள்ளேன் என்றால் சரிதான். 1-ம் எதிரி என்னிடம் அறிமுகம் ஆகும் போது அவர் பெயர் டேனியல் என்று தெரியமா என்றால் தெரியாது. அவர்

என்னிடம் அவர் பெயர் முனியான்டி என்றுதான் அறிமுகம் ஆனார். எதிரிகளுக்கம் உங்களுக்கும் எவ்வளவு ஆண்டு பழக்கம் என்றால் 2-ம் எதிரிக்கும் எனக்கும் 2005-ல் இருந்து பழக்கம். 1-ம் எதிரி 2009-ல் இருந்து பழக்கம். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்பந்த பத்திரத்தில் S. முனியான்டி என்று கையெழுத்து போட்டுள்ளார். நீதிமன்றத்தில் எதிரி வக்காலத்தில் டேனியல் என்று போடப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி எதிரி எனக்கு போட்டுக்கொடுத்த ஒப்பந்த பத்திரத்தில் எதிரி என் முன்பாக முனியான்டி என கையொப்பம் போட்டு என்னிடம் கொடுத்தார். ஆனால் எதிரி நீதிமன்றத்தில் வக்காலத்தில் போட்டது பற்றி எனக்கு தெரியாது. எதிரி கையெழுத்தை மாற்றி என் ஒப்பத்தத்திலோ, வக்காலத்திலோ, போட்டிருக்கலாம். ஒப்பந்தத்தில் உள்ள கையொப்பம் எதிரியுடையது இல்லை என்றால் எதிரி என் முன்பாக கையெழுத்து போட்டார். அது அவருடைய கையெப்பமாகத்தான் இருக்கும். ஒப்பந்தத்தில் நான் 1-ம் எதிரியுடன் ஈரோடு செல்வதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் சரிதான். ஆனால் நான் எதிரியிடம் உன் மீது நம்பிக்கை இல்லை அதனால் நானும் ஈரோடு வருகிறேன் என்று வாய்மொழியாக சொல்லி நானும் ஈரோடு சென்றேன். நான் ஈரோடு சென்று லாட்ஜில் தங்கி ரசீதை புலன் அதிகாரியிடம் கொடுத்தீர்களா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நான் ஈரோடு போகவில்லை என்றாலும், நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் சரியல்ல. நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தலிருந்து ஒரு வாரம் கழித்து புகார் செய்தேன் என்றால் சரிதான். நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்தில் இருந்து ஒரு வாரம் கழித்து நான் புகார் செய்யவில்லை என்ற சொன்னால் சரியல்ல. எந்த காவல்நிலையத்தில் புகார் செய்தேன் என்றால் தாலுகா காவல்

நிலையத்தில் புகார் செய்தேன். எந்த அதிகாரி விசாரணை செய்தார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கு சம்மந்தபட்ட விசாணை எங்கு நடைபெற்றது என்றால் காவல் நிலையத்தில் மட்டுமே நடைபெற்றது. ரிபாய் என்பவர் யார் என்றால் எனது நண்பர். ஜெயச்சந்திரன் எனது மைத்துனர். ரிபாய் என்ன வேலை செய்கிறார் என்றால் சாந்தி காம்ளக்ஸ்-ல் காவலராக பணிபுரிபவர். ரிபாய் மற்றும் ஜெயச்சந்திரனை காவல் நிலையத்தில் வைத்து விசாரணை செய்தார்களா என்றால் செய்தார்கள். சாட்சிபட்டியலில் உள்ள சந்தோஷ் மற்றும் குருசாமியை தெரியுமா என்றால் அவர்கள் யார் என்று எனக்கு தெரியாது. நான் என் புகார் மனுவில் யார் மீது புகார் செய்தேன் என்றால் முனியான்டி, ஆனந்தராஜ், ராஜேஷ் (எ) சந்துரு, சங்கர் ஆகிய 4-பேர் மீது புகார் செய்தேன். ராஜேஷ் (எ) சந்துரு, சங்கர் ஆகியோர் மீது போலிசார் நடவடிக்கை எடுத்தார்களா என்றால் எனக்கு அதை பற்றி தெரியாது. நான் புகார் மனுவில் சொல்லிய அனைத்து விபரங்களும் பொய் என்றால் சரியல்ல. ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள தொகையை கொடுப்பதற்கு உங்களுக்கு எந்த வசாதியும் கிடையாது என்றால் சரியல்ல. புலன் விசாரணை அதிகாரி என்னிடம் 6 லட்சம் எப்படி வந்தது என்ற விசாரித்தாரா என்றால் விசாரித்தார். அதற்கான ஆவணங்கள் கொடுத்தேனா என்றால் நான் நகை அடமானம் வைத்த ரசீதை கொடுத்தேன். நான் செய்த ஒப்பந்தம் உரிமையியல் ஒப்பந்தம் என்றால் சரியல்ல. ஒரு போலியான ஒப்பந்தத்தை நான் உருவாக்கினேன் என்ற எதிரிகள் சொல்கிறார்கள் அது சரியா என்றால் சரியல்ல. நான் சொல்வது போன்று நாள், நேரம், சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய புகார் நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. எதிரியிடம்

பணம் பறிப்பதற்காக போலியான ஒப்பந்தத்தை உருவாக்கியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

(Sd/-)M.Mari
Judicial Magistrate,
Sankarankovil